**ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் வருமான செலவினக் கணக்கு மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிதியம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மற்றும் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு கல்வி வலய அலுவலகத்திலிருந்து 2021 ஏப்ரல் மாதத்திற்கான பங்களிப்புத் தொகையாக 2021 யூன் 25 ஆம் திகதி பெறப்பட்டிருந்த ரூபா 2,904,049 | உடன்படுகின்றேன். கொழும்பு கல்வி வலய அலுவலகத்திலிருந்து 2021 ஏப்ரல் மாதத்திற்காக 2021 யூன் 25 இல் பெறப்பட்டிருந்த ரூபா 2,904,049.14 ஆன | வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கில் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆனது வருடக் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது. | தொகை தவறுதலாக 20.04.02.00 (மாகாண சபைகள்) தலைப்பிற்கு உரிய மேல் மாகாணத்தின் கீழ் PIV இல 11/710 ஆக வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் வருடத்தில் அத்தவறு திருத்துவதற்காகக் குறித்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | முன்னைய வருடத்திற்கான பெற வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 20,933,783 ஆனது மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்ததுடன் இறுதிக் கணக்குகளில் சீராக்கும் போது முன்னைய வருடத்திற்கான பெற வேண்டிய மீதி ரூபா 19,069,163 ஆக இருந்தமையால் ரூபா 1,864,620 மீளாய்வாண்டின் பங்களிப்புத் தொகை பெறுவனவுகளாக கணக்கில் எடுக்கப்பட்டிருந்தது. | இக்கணக்கிற்கு உரிய சேவையாற்றும் ஆசிரியர்களின் மாதாந்த சம்பளம் கொடுப்பனவு செய்யப்படும் போது அறவிடப்படுகின்ற விதவைகள் அனாதைகள் தொகைக்காக ஒரு காசோலையொன்று உரிய மாதத்தின் பிரகாரம் எமக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு அனுப்பி வைக்கப்படுகின்ற பங்களிப்புத் தொகை நடப்பு வருடத்திற்கான பங்களிப்புத் தொகையாக கருதப்பட்டாலும் சம்பளம் வழங்குவதில் இனம் காணப்பட்ட நிலுவை விதவைகள் அனாதைகள் தொகை பின்னர் எமக்கு திருப்பித் தரப்படும். அப் பெறுமதி மற்றும் சரியான கால இடைவெளி தொடர்பாக திட்டவட்டமான புரிந்துணர்வொன்று திணைக்கள அதிகாரிகளுக்கு நடைமுறையில் பெற முடியாமையால் இவ்வாறு அனுப்பபடுகின்ற முன்னைய வருடத்திற்கான நிலுவை பங்களிப்புத் தொகை பெறுவனவுகள் , நடப்பாண்டின் வருமானமாக கணக்கிடப்படுகின்றது இனங் காணப்பட்ட நிலுவை பங்களிப்புத் தொகை மட்டும் பெற வேண்டிய பங்களிப்புத் தொகையாக அட்டுறு அடிப்படையில் கணக்கில் எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் வைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பெற வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 6,636,632 ஆக இருக்க வேண்டிய போதிலும், நிதிக்கூறுக்களில் பெற வேண்டிய வருமானம் ரூபா 6,354,633 ஆக கணக்கிடப்பட்ட காரணத்தினால் பங்களிப்புத் தொகை மற்றும் பெற வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 281,999 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இக்கணக்கிற்கு மாதச் சம்பளம் வழங்கப்படும்போது அறவிடப்படுகின்ற விதவைகள் அனாதைகள் தொகைக்காக ஒரு காசோலையொன்று உரிய மாதத்தின் பிரகாரம் எமக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு அனுப்பி வைக்கப்படுகின்ற பங்களிப்புத் தொகை நடப்பு வருடத்திற்கான பங்களிப்புத் தொகையாக கருதப்பட்டாலும் சம்பளம் வழங்குவதில் இனம் காணப்பட்ட நிலுவை விதவைகள் அனாதைகள் தொகை பின்னர் எமக்கு திருப்பித் தரப்படும். அப் பெறுமதி மற்றும் சரியான கால இடைவெளி தொடர்பாக திட்டவட்டமான புரிந்துணர்வொன்று திணைக்கள அதிகாரிகளுக்கு நடைமுறையில் பெற முடியாமையால் இவ்வாறு அனுப்படுகின்ற முன்னைய வருடத்திற்கான நிலுவை பங்களிப்புத் தொகை பெறுவனவுகளானது , நடப்பாண்டின் வருமானமாக கணக்கிடப்படுகின்றது இனங் காணப்பட்ட நிலுவை பங்களிப்புத் தொகை மட்டும் பெற வேண்டிய பங்களிப்புத் தொகையாக அட்டுறு அடிப்படையில் கணக்கில் எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் வைக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் | ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புக்களிலிருந்து நிதியமொன்று | உடன்படுகின்றேன் | சட்டத்தின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஓய்வூதியச் சட்டத்தின் கட்டளை இலக்கம் 04 | ஸ்தாபிக்கப்பட வேண்டியதுடன் அதன்மூலம் ஆசிரியர்களின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், பங்களிப்புக்களின் சேகரிப்பு மற்றும் செலுத்துகைகளினை மேற்கொள்வதற்காக நிதியத்தின் சார்பில் தனியானதொரு வங்கிக் கணக்கொன்று பேணப்படாமல் இருந்ததுடன், பங்களிப்புக்கள் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் கணக்கிற்கு சேகரிக்கப்பட்டிருந்தமை மற்றும் ஓய்வூதியங்கள் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் குறித்த செலவினங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டத்தின் கட்டளை இலக்கம் 9(அ) | ஒவ்வொரு உதவித்தொகை கொடுப்பனவிற்கு தகைமை பெற்ற மற்றும் பணம் செலுத்துவோர் தொடர்பான தொடர்பான தகவல்களினை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் 09 மாகாணங்களில் 06 மாகாணங்கள் மட்டுமே பங்களிப்புத் தொகைகளை நிதியத்திற்கு பெற்றிருந்ததுடன் ஏனைய மாகாணங்களிலிருந்து பங்களிப்புத் தொகை பெறப்படாமைக்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | நிதியத்திற்கான வருமானம் சேகரித்தலுக்கான அதிகாரம் என்ற வகையில் கல்வி அமைச்சின் மூலம் ஒவ்வொரு மாதமும் மாகாணங்களிலிருந்து செலவு வைக்கப்படுகின்ற பெறுமதி மட்டுமே செலவுக் கட்டளையின் மூலம் எமக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் அப் பங்களிப்புத் தொகை அறவிடல் தொடர்பான விபரங்கள் எதுவும் அனுப்பபடமாட்டாது. தனிப்பட்ட கணக்கு முறைமையொன்றைப் பேணி வருதல் நடைமுறையில்லை என்பது அவதானிக்கப்பட்டது. சில மாகாணங்களில் மட்டுமே பங்களிப்புத் தொகை செலவு வைக்கப்படுதல் தொடர்பாக 2019.06.27 | பங்களிப்புத் தொகை செலுத்துவோர் தொடர்பாக முறையான தகவல் முறைமை யொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | ஆம் திகதிய விவெ/கிதாமு/ரீ.டபிள்யு.பீ /13/2019 ஆம் இலக்க கடிதம் கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பின்னர் கல்வி அமைச்சினால் இது தொடர்பாக எனக்கும் பிரதியுடன் அனைத்து மாகாணக் கல்வி பணிப்பாளர்களக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 295,472,900 மிகையாக இருந்ததுடன் அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 324,414,589 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 28,941,689 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு பங்களிப்புத் தொகை மீளளித்தல் ரூபா 7,658,209 ஆல் அதிகரித்தமை மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 39,669,279 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை , மீளாய்வாண்டில் புதிய உறுப்புரிமைகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை, நிதியத்தின் உறுப்புரிமைகளிலிருந்து நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை , உறுப்பினர்களின் பெயர். பாடசாலை, அடங்கிய அட்டவணையொன்று பராமரிக்கப்படாமையால் நிதியத்திற்கு வருடாந்தம் உண்மையாகக் கிடைக்க வேண்டிய தொகை, கிடைத்த தொகை மற்றும் நிலுவைத் தொகை தொடர்பான தகவல்களைச் சரியாக தனித்தனியாக இணங்காண்பதற்கு முடியாதிருந்தது. | பிரிவேனா மற்றும் உபக்குருத பள்ளி ஆசிரியர்களின் தனிப்பட்ட பெயர்கள், பாடசாலை அல்லது பிரிவெனா, உரித்தாகும் மாகாணங்கள் , நிதியத்தின் உறுப்புரிமைகளிலிருந்து விலகியவர்களின் எண்ணிக்கை போன்றன தொடர்பான ஆரம்பத் தகவல்கள் உள்ளடக்கிய தரவு முறைமையொன்று நிறுவப்பட்டு மேம்படுத்தும் பணிக்காக பிரிவெனா மற்றும் உபக்குருத பள்ளிகளின் ஆதரவும் அவசியம். ஆனால் இந்த ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் போது விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு நிலுவைத் தொகையைக் கணக்கீட்டு அந் நிலுவைத் தொகையை அறவிட்டதன் பின்னரே கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | நிதியத்தின் உறுப்பினர்கள் தொடர்பான நாளது வரையாக்கப்பட்ட அட்டவணை யொன்று பராமரிக்கப்படுதல் வேண்டும். |